11.03.2025

O.S.No.256/2011

வா.சா.1.திரு.அசன்பாவா த.பெ. முகமதுமைதீன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது. மதுரை மூன்றாவது கூடுதல் சார்பு நீதிமன்றம் E.P.No.255/1983 மனுவில் அமினா வாரண்ட் மற்றும் அந்த வாரண்ட் நிறைவேற்றப்பட்டதற்கான அமினா ரிப்போர்ட் ஆகியவற்றின் நகல் ( மேற்படி ஆவணம் நகல் என்ற எதிர்தரப்பு ஆட்சேபணையுடன் அந்த ஆவணம் வா.சா.ஆ.**1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 14.02.1990 தேதியிட்ட பதிவு செய்யப்படாத கிரைய ஆவணம் நகல் (மேற்படி ஆவணம் பதிவு செய்யப்படாத மற்றும் முறையாக முத்திரை கட்டணம் செலுத்தப்படாத ஆவணம் என்ற எதிர்தரப்பு ஆட்சேபணையுடனும் வாதி தரப்பில் அந்த வழக்கு உறுத்துகட்டளை பரிகாரம் மட்டும் கோரியிருப்பதால் மேற்படி ஆவணத்திற்கான முத்திரை கட்ணணம் செலுத்தவேண்டியதில்லை என்று கூறுவதால் அந்த ஆவணம் வா.சா.ஆ.**2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) காதர்பிச்சை என்பவரது இறப்பு சான்றிதழ் நகல் ( மேற்படி ஆவணம் நகல் என்ற எதிர்தரப்பு ஆட்சேபணையுடன் அந்த ஆவணம் வா.சா.ஆ.**3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 22.10.2008 தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் அசல் (அந்த ஆவணம் வா.சா.ஆ.**4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 08.02.2008 மற்றும் 07.04.2005 சொத்து வரி ரசீதுகள் அசல் (அந்த ஆவணம் வா.சா.ஆ.**5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 19.09.2011 தேதியிட்ட காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகார் மனு கையிருப்பு நகல் (அந்த ஆவணம் வா.சா.ஆ.**6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 14.02.1990 தேதியிட்ட பதிவு செய்யப்படாத கிரைய ஆவணம் அசல் (மேற்படி ஆவணம் பதிவு செய்யப்படாத மற்றும் முறையாக முத்திரை கட்டணம் செலுத்தப்படாத ஆவணம் என்ற எதிர்தரப்பு ஆட்சேபணையுடனும் வாதி தரப்பில் அந்த வழக்கு உறுத்துகட்டளை பரிகாரம் மட்டும் கோரியிருப்பதால் மேற்படி ஆவணத்திற்கான முத்திரை கட்ணணம் செலுத்தவேண்டியதில்லை என்று கூறுவதால் அந்த ஆவணம் வா.சா.ஆ.**7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) காதர்பிச்சை என்பவரது இறப்பு சான்றிதழ் அசல் ( அந்த ஆவணம் வா.சா.ஆ.**8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 15.03.2005 தேதியிட்ட சொத்து வரி ரசீது அசல் ( அந்த ஆவணம் வா.சா.ஆ.**9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

1410 பசலிக்கான 07.04.2005 தேதியிட்ட சொத்து வரி ரசீது அசல் ( அந்த ஆவணம் வா**.**சா**.**ஆ**.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 1411 பசலிக்கான 07.04.2005 தேதியிட்ட சொத்து வரி ரசீது அசல் ( அந்த ஆவணம் வா**.**சா**.**ஆ**.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

**(குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதியில் ஒத்தி வைக்கப்படுகிறது)**